Registered as a News Paper     பக்கங்கள் 04     விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     Peoples Daily     மக்கள் தினசரி


நாதம் 08     திருவள்ளுவர் ஆண்டு 2023     புரட்டாதி 19     (05 - 10 - 1992)     திங்கட்கிழமை     ஓசை 230

## 16 இலட்சம் பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை

இலங்கையில் இன்று பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக பதினாறு இலட்சம் வரையாகும் எனத் தெரியவருகிறது. வறுமை உட்படப் பல்வேறு காரணங்களால் இந்நிலை ஏர்பட்டுள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது மேலும் ஏறத்தாழ 30,000 சிறுவர்கள் மதுபாவனைக்கு உட்பட்டுள்ளனர் என்ற விடயமும் தெரியவந்துள்ளது மேலும் வடக்கு - கிழக்கு போரினால் எட்டரை இலட்சம் சிறுவர்கள் வரை பல்வேறு நெருக்கடிக்குள்ளாகி உள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது அத்துடன் 30 ஆயிரம் பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# 5 கோடி ரூபா பெறுமதியான ஆயுத இழப்பு

# பறிகொடுத்த படையினர் மீது விசாரணை



## புலிகளின் ஆயுத பலம் கூடிவிட்டதாக அரசாங்க வட்டாரங்கள் கலக்கம்

(கொழும்பு)

கட்டைக்காட்டு இராணுவ மினிமுகாமிலிருந்து விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் தற்போதைய பெறுமதி 5 கோடி ரூபா எனவும், 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் போர் ஆரம்பித்த பின்னர் இவ்வளவு பெரிய தொகை ஆயுத தளபாடங்களை ஒரே தாக்குதலில் புலிகளிடம் இராணுவம் இழந்ததில்லை எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை, புலிகள் இந்த ஆயுதங்களைக் கைப்பற்றிச் சென்றமை தொடர்பாக பூரண விசாரணை நடத்த உத்தரவு இடப்பட்டுள்ளதாகவும், இராணுவ தரப்பில் யாராவது குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் தண்டிக்கப்படுவார்கள் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை கட்டைக்காட்டு இராணுவ மினிமுகாமிலிருந்து விடுதலைப்புலிகள் கைப்பற்றிய பெருந்தொகை ஆயுதங்கள், வெடிபொருட்கள் காரணமாக புலிகளின் பலம் முன்னைவிட தற்பொழுது மேலும் அதிகரித்துள்ளதாக இராணுவ அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது அதேவேளை விடுதலைப்புலிகளால் எவ்வாறு இப்பெருந்தொகை ஆயுதத்தைக் கைப்பற்ற முடிந்தது என்பது குறித்து அரசாங்கம் அதிர்ச்சியும் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1990 ஜூனில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் கட்டைக்காட்டில் கைப்பற்றப்பட்டவையே தொகையில் மிக அதிகமானவை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெருந்தொகையான புலிப் படையினர் கடந்த வெள்ளியன்று இத்தாக்குதலை நடாத்தினார்கள். முகாமில் இருந்த அனைத்து இராணுவத் தளபாடங்களையும் அவர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள். இராணுவத்தினர் மிதந்த தீவிரத்துடன் போரிட்டார்கள். இருப்பினும் ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுவதை தவிர்க்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


ஒருசில மணி நேரத்தினுள் விடுதலைப் புலிகள் பல கோடி ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றிச் சென்று விட்டார்கள் என 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

### தளபதிகள் புலேந்திரன் குமரப்பா உட்பட

## பன்னிரு மாவீரர்களின் நினைவு தினம் இன்று

சிறிலங்கா



கட்டைக்காட்டு மினிமுகாம தாக்குதலில் ஆயுதக்கிடங்கிலிருந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட எவ். என். சி. ரக துப்பாக்கிகளை முதலாவது படத்திலும் 50 கலிபர் விமான எதிர்ப்புத் துப்பாக்கி உட்பட கனரக ஆயுதங்களின் தொகுதியை இரண்டாவது படத்திலும், ரவைகளின் ஒரு தொகுதியினை மூன்றாவது படத்திலும் காணலாம்.

றமை தொடர்பாக பூரண விசாரணை நடத்த உத்தரவு இடப்பட்டுள்ளதாகவும், இராணுவ தரப்பில் யாராவது குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்கள் இராணுவ நீதிமன்றத்தில் தண்டிக்கப்படுவார்கள் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை கட்டைக்காட்டு இராணுவ மினிமுகாமிலிருந்து விடுதலைப்புலிகள் கைப்பற்றிய பெருந்தொகை ஆயுதங்கள், வெடிபொருட்கள் காரணமாக புலிகளின் பலம் முன்னைவிட தற்பொழுதுமேலும் அதிகரித்துள்ளதாக இராணுவ அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. அதே வேளை விடுதலைப் புலிகளால் எவ்வாறு இப்பெருந்தொகை ஆயுதத்தைக் கைப்பற்ற முடிந்தது என்பது குறித்து அரசாங்கம் அதிர்ச்சியும் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1990 ஜூனில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் கட்டைக்காட்டில் கைப்பற்றப்பட்டவையே தொகையில் மிக அதிகமானவை என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பெரும்தொகையான புலிப் படையினர் கடந்த வெள்ளியன்று இத்தாக்குதலை நடாத்தினார்கள். முகாமில் இருந்த அனைத்து இராணுவத் தளபாடங்களையும் அவர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள். இராணுவத்தினர் மிகுந்த தீவிரத்துடன் போரிட்டார்கள். இருப்பினும் ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுவதை தவிர்க்க முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒருசில மணி நேரத்தினுள் விடுதலைப் புலிகள் பல கோடி ரூபா பெறுமதியான இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றிச் சென்று விட்டார்கள் என 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா இராணுவத் தளபதி மன்னார் விஜயம்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்னாவும் வடபிராந்திய இராணுவத் தளபதி ஜரிசில்வாவும் நேற்று மன்னாருக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இவர்கள் மன்னார் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையின் விளைவுகளை நேரில் அவதானித்ததாகவும் இராணுவம் மற்றும் உயர் அதிகாரிகளுடன் முக்கிய பேச்சு வார்த்தையை நடாத்தியதாகவும் தெரிய வருகிறது.

## மட்டக்களப்பு நகரில் திடீர் தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் ஆனைப்பந்திக்கும் ஆற்றங்கரைக்கும் இடையே அமைந்துள்ள பல வீடுகள் கடந்த வியாழக்கிழமை திடீர் சோதனைக்கு உள்ளாகியது.

மாலை 6 30 மணிக்கு அப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தளபதிகள் புலேந்திரன் குமரப்பா உட்பட

# பன்னிரு மாவீரர்களின் நினைவு தினம் இன்று

லெப்டினன்ட் கேணல் புலேந்திரன், லெப்டினன்ட் கேணல் குமரப்பா உட்பட பன்னிரு மாவீரர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினம் இன்று தமிழீழம் எங்கும் நினைவுகூரப்படுகிறது.

இப்பன்னிரு வேங்கைகளை நினைவு கூரும் முகமாக இவர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை சூடியும் ஈச்சுடரேற்றியும் மக்கள் அஞ்சலி செலுத்துவர்.

இம்மாவீரர்களின் நினைவாக தமிழீழமெங்கும் பொதுக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

யாழ் மாவட்ட பொதுக்கூட்டம் மாலை 4 45 மணிக்கு தீருவில் மைதானத்தில் ஆரம்பமாகும். அத்துடன் இப் பன்னிரு மாவீர்களின் நினைவாக மாவீரர் பணிமனை வெளியீடான ''தீருவில் தீ'' எனும் நூல் வெளியிடப்படும்

இப்பன்னிருவேங்கைகளையும் கொக்காவில் சிங்களப் படைமுகாம் தகர்ப்பின் போது மண்ணின் மைந்தர்களாகிய மாவீரர்களையும், வரிப்புலி லெப். கேணல் சந்திரன் (கண்ணாடி) மற்றும் ஒன்பதாம் பத்தாம் மாதம் நினைவு கூரப்ப வேண்டிய மாவீரர்களின் நினைவாகவும் வன்னி மாவட்டத்தில் வட்டக்கச்சியிலும் கனகராயன் குளத்திலும் இன்று மாலை 8-30 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

நீகன் நகரில் மாவீரர் மண்டபத்தில் இப்பன்னிரு வேங்கைகளையும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள மக்கள் நினைவு கூருகின்றார்கள்.

# 200 உணவு லொறிகள் வவுனியாவில் தடுத்துவைப்பு

(வவுனியா)

வவுனியா நகரில் வடபகுதியைச் சேர்ந்த இருநூறு லொறிகள் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மூன்று மாதங்களின் பின்பே இந்த லொறிகள் அனைத்தும் வடபகுதி நோக்கி அனுப்பி வைக்கப்படும் என்று இராணுவம் அறிவித்துள்ளதாம்

இராணுவம் லொறி பற்றி

(4ஆம பக்கம் பார்க்க)

# பாகிஸ்தான் தூதுவராலய வர்த்தகப் பிரிவு மூடப்பட்டது

### இருதரப்பு வர்த்தகம் பாதிப்படையலாம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் அதன் வர்த்தகப் பிரிவை மூடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அண்மையில் பாகிஸ்தான் விஜயம் மேற்கொண்டிருந்த போதே வர்த்தகப் பிரிவு மூடப்பட்டது. அதே வேளை பாகிஸ்தான் அதிகளவு சிறிலங்காத் தேயிலையைக் கொள்வனவு செய்யப் போவதாக ஜனாதிபதி பிரேமதாசாவுக்குப் பாகிஸ்தான் பிரதமர் தெரியப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் அதன் வர்த்தகப் பிரிவை மூடியதனால் இரு

(4-ம் பக்கம் பார்க்க)

# மீட்புநிதி செலுத்துவதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம்

### நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி அறிவிப்பு

இதுவரை மீட்புநிதிக் கடன் திட்டத்திற் பங்கேற்காத, வசதி உள்ளவர்கள் தமிழீழ மீட்பு நிதியிற்கு தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு ஒரு வாய்ப்புத்தர தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் முடிவு செய்துள்ளனர். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்துமாறு வசதி உள்ள அனைவரையும் நிதித்துறையினர் அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டியுள்ளனர்.

அவ் அறிக்கையின் விபரம் வருமாறு:

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகக் கடினமான நீண்ட தூரத்தைக் கடந்து வந்துள்ளோம். சிறிலங்கா அரசினதும் படைகளினதும் ஒடுக்கு முறைக் கொடுமைகள், அட்டூழியங்கள் இந்திய வல்லாண்மையின் கொடுங்கோன்மைகள் இடையேயும் முழு உலகமும் வியக்கத்தக்க வெற்றிகள் பலவற்றைப் பெற்றுதமிழீழத்தின் விடுதலையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறோம்.

எமது வெற்றிகளுக்கு அடித்தளமாக அமைந்தவை எமது

(4ஆம் பக்கம் பார்க்க)

**தாவரம் வளர்ந்தோங்க தரணி சிறந்தோங்கும்**

# யுத்தம் முடிந்தால் கல்விக்கு கூடுதல் நிதி

(கண்டி)

கல்வித்துறைக்கு ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்படமாட்டா என சிறிலங்காப் பிரதமரும் நிதியமைச்சருமாகிய டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்,

கண்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றில்பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு யுத்தத்திற்கு 250 கோடி ரூபாவினை அரசாங்கம் செலவிடவேண்டியிருக்கிறது. இது ஒரு மிகப் பிரமாண்டமான தொகையாகும் என்றும்,

இந்த யுத்தத்தை நிறுத்த முடியுமானால் கல்வித் துறைக்கு மேலும் அதிக நிதியை ஒதுக்கக் கூடியதாகவிருக்கும் என்றும்,

கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதியதாக

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### மனைப் பொருளியல்

மனைப் பொருளியல் மாதிரிகை வினா-விடை (ஆண்டு 10—11) வெளிவந்துவிட்டது. பரீட்சையில் அதிசிறந்த பெறுபேற்றைப்பெற உதவும் வழிகாட்டி. ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3308)

### Your Watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaffna
(Opposite old Vihare)
(சி/5156)

### விற்பனையாகின்றன

இலகு ஆங்கிலம் (English Made Eassy) ஆண்டு 4, 5, 6, ரூ. 19 50, இலகு தமிழ் இலக்கண ரூ. 12 50, தமிழ்த்தென்றல் - யாதுமூரானின் கவிதைகள் ரூ.20. 00 எல்லாப்புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். பொற்கமலதேவி பதிப்பகம். (3305)

### யாழோசையின் இசைவகுப்புகள்

புல்லாங்குழல், வயலின், ஓகன், கிற்றார் ஆகிய பாடங்கள் 05-10-1992 விஜய தசமி அன்று (திங்கள்) மாலை 4. 30 மணிக்கு ஆரம்பிக்கப்படும். தொடர்பு:- "யாழோசை" 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (3282)


### தொடர்பு கொள்ளவும்

நோயாளர் நலன் புரிச் சங்க மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் ஹுமாலா இன, ஜே 164824 இலக்கமுள்ள மிதிவண்டி ஒன்று மாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாற்றி எடுத்துச் சென்றவர் நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

### நவராத்திரி விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு கா. கணேசதாசன் தலைமையில் நவராத்திரி

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கடற்புலி கப்டன் பழனி**
(பாலசுப்பிரமணியம் யோகேந்திரராசா)

தாயின் மடியில் 22-05-60 — மண்ணினுள் விதையாக 5-10-87

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நீயும் உன்நினைவுகளும் வாழும்
எம் நெஞ்சங்களில்.

இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்.

புதுவீதி
வல்வெட்டித்துறை,
(3296) -- குடும்பத்தினர்

# கட்டைக்காட்டில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

கட்டைக் காட்டில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சாதனைத்தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பதின்மூன்று வேங்கைகளுக்கும் யாழ் குடா மக்கள் நேற்று முன்தினம் தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டனர்

யாழ்.குடாநாட்டின் பலபகுதிகளிலும் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்களின் புகழுடல்கள் வைக்கப்பட்டன.

சுன்னாகம் சந்தையில் அமைக்கப்பட்டிருந்த விசேடமேடையில், மதியம் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன அந்த நேரம் மக்கள் கண்ணீர் மல்க தமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்தினர்

அத்துடன் பாண்ட் இசையுடன் பிரதான வீதிகளில் மாவீரர்களின் புகழுடல்கள் செல்லும் போது மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

வீரச்சாவடைந்த இளமாறன், ராஜவதனன் ஆகிய மாவீரர்களது புகழுடல்கள் குருநகர் பாஷையூரிலுள்ள அவரவரது இல்லங்களில் நேற்று முன்தினம் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன

இதனைத் தொடர்ந்து கொக்குவில் சேணியடிப்பகுதியிலும் மாவீரர்களின் புகழுடலகள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | உதிர்வு |
|---|---|
| 26 — 08 — 1938 | 20 — 09 — 1987 |

**கணபதி கதிரமலை**

திதி: 05- 10 1992

ஆண்டு ஐந்து போனாலென்ன
ஐயா! உமது நினைவு எம்மைவிட்டு நீங்காது.

இல. 100,
சி வி யூ. றோட்,
திருக்கோணமலை,

இவரது பிரிவால் தவிக்கும்
மனைவி, மக்கள்,
மருமகன், பேர்த்தி

(3299)

### சுன்னாகத்தில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் மூன்று கிளைகள் உடைக்கப்பட்டு பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இரவு வேளையில் கொள்ளையிடப்பட்டுள்ளன

28 ஏழிலக்க விற்பனைநிலையக்கிளையும் ஏழாலை தெற்குப் பகுதியில் உள்ள இரண்டு கிளைகளுமே உடைக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டுள்ளன.


### சித்ராலயா

### இடமாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி நல்லூரில் இயங்கி வந்த எமது நிறுவனம் 5-10 1992 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.
(3311)


## நினைவு கூருகின்றோம்... 1992 - 10 - 05

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் பலாலி இந்தியப் படை முகாமில் - இந்திய - சிறிலங்கா அரசுகளின் கூட்டுச்சதியை அம்பலப்படுத்துமுகமாக சயனைற் உட்கொண்டு தம்முயிரீந்த:

தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும், திருக்கோணமலை மாவட்டத் தளபதியுமான

லெப்.கேணல் புலேந்திரன் (குணநாயகம் தருமராசா - பாலையூற்று, திருக்கோணமலை)

முன்னாள் மட்டு - அம்பாறைத் தளபதியும், யாழ். மாவட்டத் தளபதியுமான

லெப் கேணல் குமரப்பா (பாலசுந்தரம் இரத்தினபாலன் - நடராசா வீதி, ரேவடி, வல்வெட்டித்துறை, யாழ்.)

மேஜர் அப்துல்லா (கணபதிப்பிள்ளை நகுலகுமார் - கச்சாய் வீதி, சாவகச்சேரி)

கப்டன் கரன் (வைத்திலிங்கம் மனோகரன் 20, சுவாட்ஸ் வீதி, சுண்டிக்குளி யாழ்.)

கப்டன் மிரேஷ் (சுவராஜா மோகனராஜா - ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை - யாழ்.)

கப்டன் பழனி (பாலசுப்பிரமணியம் யோகேந்திரராஜா - புதுவீதி, வல்வெட்டித்துறை - யாழ்)

கப்டன் நளன் (கணபதிப்பிள்ளை குணேந்திரராஜா - ஐயனார் கலட்டி, பருத்தித்துறை, யாழ்)

லெப்.அன்பழகன் (தேசோமயானந்தம் உத்தமசிகாமணி - சிவகுரு வித்தியாசாலை வீதி, வல்வெட்டித்துறை, யாழ்)

லெப் தவக்குமார் (சோமசுந்தரம் பாக்கியராஜா - முள்ளியான், வெற்றிலைக்கேணி, யாழ்.)

2-ம் லெப் றெஜினோல்ட் (கபிரியேல் பேனாட் மரியநாயகம் - முள்ளியான், வெற்றிலைக்கேணி, யாழ்)

2-ம்லெப். ஆனந்தகுமார்

## ஈழமண்ணில் இந்திய நயவஞ்சகம் பறித்தெடுத்த பன்னிருவருக்கும் எம் இதய அஞ்சலிகள்

இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய போராளி களுக்கும் எமது அஞ்சலிகள்.

புதுவீதி, வல்வெட்டித்துறை. (3296) -- குடும்பத்தினர்

இல. 100,
சி வி யூ. றோட்,
திருக்கோணமலை,

இவரது பிரிவால் நவிக்கும்
மனைவி, மக்கள்,
மருமகன், பேர்த்தி
(3299)

### தொடர்பு கொள்ளவும்

நோயாளர் நலன் புரிச் சங்க மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் லுமாலா இன, ஜே 164824 இலக்கமுள்ள மிதிவண்டி ஒன்று மாற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாற்றி எடுத்துச் சென்றவர் நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

## நவராத்திரி விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு கா. கணேசதாசன் தலைமையில் நவராத்திரி பூசை வழிபாடும், கலைமகள் விழாவும் இன்று 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும், சகலகலா வல்லிமாலை பாடல்களும் இடம்பெறும். (24)

### பாடும் மீன் கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் குருநகர் பாடும் மீன் கழகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

சென்ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பாடும் மீன் கழகம் பாஷை சென்அன்ரனிஸ் கழகத்தை 3-1 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியனாகியது.

இப்போட்டிக்கு திரு.ஜி.எம். செபஸ்ரியாம்பிள்ளை நடுவராக கடமையாற்றினார். (42)

### தம்பலகாமத்தில் வீடுகள் சேதம்

(தம்பலகாமம்)

தம்பலகாமம் பகுதியில் அண்மையில் வீசிய பலத்த காற்றினால் கிடுகுகளால் வேயப்பட்ட பல வீடுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தம்பலகாமம் சந்திக்கு அண்மையில் உள்ள நெல்சேமிக்கும் நிலையத்தில் இருந்து பாலம் போட்டாறு வரையுள்ள கண்டி - திருக்கோணமலை வீதியின் இருமருங்கிலும் நிறுவனம் ஒன்றினால் புதிதாகக் கட்டப்பட்ட வீடுகளே பெரும்பாலாக சேதம் அடைந்துள்ளன.

வீடுகள்பலவற்றின் தகரமேற் கூரைகள் தூக்கி எறியப்பட்டும் சுவர்கள் சாய்ந்தும் உள்ளன. 35க்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

# ஈழமண்ணில் இந்திய நயவஞ்சகம் பறித்தெடுத்த பன்னிருவருக்கும் எம் இதய அஞ்சலிகள்

லெப் கேணல் குமரப்பா (பாலசுந்தரம் இரத்தினபாலன் - நடராசா வீதி, ரேவடி, வல்வெட்டித்துறை, யாழ்.)
மேஜர் அப்துல்லா (கணபதிப்பிள்ளை நகுலகுமார் - கச்சாய் வீதி, சாவகச்சேரி)
கப்டன் கரன் (வைத்திலிங்கம் மனோகரன் 20, கவாட்ஸ் வீதி, சுண்டிக்குளி யாழ்.)
கப்டன் மிரேஷ் (தவராஜா மோகனராஜா - ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை - யாழ்.)
கப்டன் பழனி (பாலசுப்பிரமணியம் யோகேந்திரராஜா - புதுவீதி, வல்வெட்டித்துறை - யாழ் )
கப்டன் நளன் (கணபதிப்பிள்ளை குணேந்திரராஜா - ஐயனார் கலட்டி, பருத்தித்துறை. யாழ் )
லெப்.அன்பழகன் (தேசோமயானந்தம் உத்தமசிகாமணி - சிவகுரு வித்தியாசாலை வீதி, வல்வெட்டித்துறை, யாழ் )
லெப். தவக்குமார் (சோமசுந்தரம் பாக்கியராஜா - முள்ளியான், வெற்றிலைக்கேணி, யாழ்.)
2-ம் லப் றெஜினோல்ட் (கபிரியேல் பேனாட் மரியநாயகம் - முள்ளியான், வெற்றிலைக்கேணி, யாழ் )
2-ம்லெப். ஆனந்தகுமார் (ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் அலோசியஸ் - மணற்காடு, குடத்தனை, யாழ்.)

1988 ஆம் ஆண்டு மணலாறு - அளம்பில் உடப்புக்குளம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம்லெப் கௌசிகன் (வெற்றிவேலு கருணாகரன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு)

ஊர்காவற்றுறைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் மேற்கொண்ட முற்றுகையின் போது வீரச்சாவெய்திய -

ரஞ்சன் (பொன்னுத்துரை உதயகுமார் - அரியாலை, யாழ்.)

யாழ் - நல்லூர், சங்கிலியன் வீதியில் தேசவிரோத சக்திகளினால் மின்சாரம் பாய்ச்சிக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

திருமதி துரையம்மா தர்மலிங்கம்

முல்லைத்தீவு - அளம்பில் வீதியில் இந்தியப்படையினரால் வீட்டுக்குள்ளிருந்து இழுத்துவரப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட பெண் உட்பட 4 தமிழர்கள்.

யாழ் - அச்சுவேலி, இடைக்காடுப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - மாங்குளம் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த தேசவிரோதசக்திகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

கப்டன் ஆனந்தன் (சுப்பிரமணியம் கருணாகரன் - செம்மலை, அளம்பில், மணலாறு)
பாரத் (செபமாலை கியோமர்பெர்னான்டோ - வண்ணாங்குளம், முல்லைத்தீவு)

1990 ஆம் ஆண்டு அம்பாறை கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட குமாரவேலியார் கிராமம், வேப்பவெட்டுவான் பகுதிகளைச்சேர்ந்த 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5164)


## சுவையருவி

பலரின் வேண்டுகோளிற்கமைய காலை 6.00 மணி முதல் காலை உணவு வகைகள்
பாண்! பாண் சார் தயாரிப்புக்கள்!

பகல் 11.30 மணி முதல் மதிய உணவு
சைவ, அசைவ கறிகளுடன் சோறு!
புரியாணி [கோழி/ஆடு]! பிரைட் றைஸ் [கோழி\ஆடு]!
சூப் வகைகள்! விசேட கடல் உணவு தயாரிப்புகள்!

எந்நேரமும் கேக் வகைகள்! சைவ, அசைவ பலகாரங்கள்!
இனிப்பு பலகார வகைகள்!
வெவ்வேறு சுவைகளில் ஐஸ் கிறீம் வகைகள்!
குளிர்பானங்கள்! நறுமண பீடா!

உங்கள் தேவைகளை நிறைவு செய்ய தேவைக்கேற்ப தயாரித்து வழங்கப்படுபவை:
திருமண, பிறந்த நாள் கேக் வகைகள், பலகார வகைகள், உணவு வகைகள்

உங்கள் விசேட வைபவங்களிற்கு
எமது பரிமாறு சேவை! பாத்திர வாடகை சேவை!!

நாம் உங்களை நாடி நகருகின்றோம்
எமது விற்பனை வாகனங்களில் ஐஸ் கிறீம் - ஐஸ் பழம் - சொக்
சுத்தம் சுகம் தரும்! சுகாதாரம் நோயை விரட்டும்!!

**சுவை! சுத்தம்!! சுகாதாரம்!!!**
யாவும் நிறைந்த

# சுவையருவி

**மின் நிலைய வீதி - யாழ்ப்பாணம்**

குறிப்பு: சைவ, அசைவ உணவுகள் தனித்தனி சமையலறைகளில் வெவ்வேறு ஊழியர்களால் தயாரிக்கப் படுகின்றன.

(சி-5165)

சிந்தனைக்கு

மென்மை பலனளிக்காதபோது, கண்டிப்பும் கடுமையும் அனுமதிக்கப்படலாம்.
— பியேர் கோர்னெய்ல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்-05- 10- 1992
கொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## இந்திய - சிறிலங்கா கூட்டுச்சதி

லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா உட்பட பன்னிரண்டு வேங்கைகள் வீரச்சாவடைந்த ஐந்தாம் ஆண்டு நினைவுநாள் இன்று ஆகும். இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கையினால் தமிழ்மக்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை என்பதோடு, தமிழர் தமது உரிமைக்காக சிறிலங்கா இராணுவத்துடன் மட்டுமல்ல, இந்திய இராணுவத்துடனும் போராடியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எழுந்துள்ளதை தமிழ் மக்களுக்கு வெளிப்படையாகவும், தெளிவாகவும் உணர்த்திய தினமும் இது ஆகும்.

தளபதிகள் லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல் குமரப்பா உட்பட பதினேழு போராளிகள் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை ஒரு திட்டவட்டமான ஒப்பந்த மீறலாகும் விடுதலைப் புலிகளை உயிருடன் கைது செய்வதென்பது போராட்ட வரலாற்றில் பெரிதும் அபூர்வமானதாகும். அதிலும் முக்கிய தளபதிகள் இருவர் உட்பட பதினேழு விடுதலைப் புலிகள் எதிர்ப்பின்றி கைதாவதென்பது புலிகளின் போராட்டவரலாற்றில் இடம்பெறாதசம்பவமாகும்.

ஆனால், நடந்தது. இந்திய- சிறிலங்கா ஒப்பந்தத்திற்கு கௌரவம் அளிப்பதாக ஒப்பந்தத்தின் பின் புலிகள் உறுதியளித்திருந்ததனால் இவ்வரலாற்றுப் பிறழ்வு நிகழ்ந்தது. ஒப்பந்தச் சரத்தின் படி தமக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்பதால் புலிகள் கைதாவதற்கு இணங்கினர்.

ஆனால், இந்தியாவும் - சிறிலங்காவும் ஒப்பந்தத்தை மதிக்கவில்லை. இந்தியா தமிழ்மக்களுக்கு துரோகம்செய்தது. சிறிலங்கா ஒப்பந்தத்தை மீறியது. தற்பாதுகாப்பிற்கான ஆயுதங்களை மட்டுமே வைத்திருந்த விடுதலைப்புலிகளை கைது செய்தது ஒரு தெட்டத்தெளிவான ஒப்பந்தமீறலாகும் இக்கைது நடந்த பின்னர், இந்தியா இதில் தலையிட்டு விடுதலைப் புலிகளை விடுவிக்காமை தமிழ்மக்களினதும், விடுதலைப் புலிகளினதும் பாதுகாப்பு தொடர்பாக அதன் நிலைப்பாட்டையும், துரோகத்தனத்தையும் வெளிக்காட்டுவதாகவும் இருந்தது

சிறிலங்காஇராணுவத்தைப்பொறுத்து தளபதிகள் புலேந்திரனும், குமரப்பாவும்என்றுமே அச்சுறுத்தலாக இருந்தவர்களாகும் இவ்வளவு இலகுவாக இவ்விரு

# புலேந்திரன், குமரப்பா விவகாரம்

## யுத்தமேகத்திற் சரிந்த மழை

புலேந்திரன், குமரப்பா உட்படப் பன்னிருவரை இந்தியா பலியெடுத்தமை ஒரு தற்செயல் நிகழ்வல்ல இதற்கு ஆழமான அரசியற் பின்னணி உண்டு,

ஏன் திலீபனை இந்தியா சாக விட்டது என்ற கேள்வியைச் சற்று பின்னோக்கிக் கேட்டால் இதற்கான விடை சுலபமானது. திலீபனை இந்தியா சாகவிட்டதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருந்தன. ஒன்று, இலங்கைத் தீவில் இந்திய இராணுவம் கால்வைக்க முன்பே புலிகளுடன் யுத்தம் புரிவதென்ற முடிவை இந்திய இராஜதந்திரிகள் முன்கூட்டியே எடுத்துவிட்டனர் இரண்டு திலீபனின் உண்ணாவிரதத்திற்கு இந்தியா செவிசாய்க்குமானால் தென்னிலங்கையில் பௌத்த பிக்குகள் இதேபோல பல உண்ணாவிரதங்களை இருக்க இது காரணமாய் அமைந்துவிடும். எனவே திலீபனைச் சாகவிடுவதாற்றான் பிக்குமாரின் இவ்வாறான போராட்டங்கள் தோன்றாமற் செய்யலாம் என்பதாகும்.

இவ்விரு காரணங்களுள் புலிகளுடன் யுத்தம் புரிவது இந்தியாவின் முன்கூட்டிய முடிவு என்ற காரணம் இங்கு முக்கியமானது இந்தியா அவ்வாறான ஒரு முடிவுக்கு முன்கூட்டியே வந்துவிட்டது என்பதை தெளிவாகக் காணலாம்.

டிக்சிற்றின் அகங்காரமான பேச்சுக்களும், இந்தியா ஈழ மண்ணில் மேற்கொண்ட பல நடவடிக்கைகளும் இதனை இலகுவாக நிரூபித்து நிற்கின்றது.

தன்னைச் சந்திக்கச் சென்றிருந்த ஆங்கிலப் பத்திரிகையாளரிடம் டிக்சிற் யுத்தத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு பின்வருமாறு கூறினார்;

''பிரபாகரனிடம் போய்ச் சொல்லு, நாங்கள் யுத்தத்திற்குத் தயாராம் என்று''

மேலும் டிக்சிற்றுடன்ஆங்கிலப்பத் திரிகையாளர் கலந்து கொண்ட பத்திரிகையாளர் மகாநாடொன்றில் அவரிடம் கேட்கப்பட்ட பல கேள்விகளில் ஒன்று இராணுவத்தை கட்டுப்படுத்துவதற்கென்றால் இலங்கை இராணுவத்தின் முகாம்களுக்கு அருகே மட்டும் முகாம்களை அமைத்தாற் போதும் தானே! ஏன் எங்குப் பரவலாக பல முகாம்களை அமைக்கிறீர்கள்?

அதற்கு டிக்சிற் கூறியபதில், உத்தியோக பூர்வமாகச்சொல்வதென்றால் ஆயுதம்தாங்கிய தமிழ் இளைஞர்களுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் சண்டைஏற்படாது பார்த்துக்கொள்ள.



அப்போது ஆங்கிலப் பத்திரிகையாளர்கேள்விகேட்டாராம் உத்தியோக பூர்வமற்ற முறையிற் சொல்வதென்றால்...?

'' இயக்கங்களுக்கிடையில் மோதலேற்படாது பார்த்துக்கொள்ள'' என டிக்சிற் பதிலளித்தார்.

இங்கு டிக்சிற்றின் உத்தியோக பூர்வமற்ற பதில் என்பதற்குள் இன்னுமோர் உத்தியோகபூர்வமற்ற பதில் அடங்கியுள்ளது. அதாவது புலிகளுக்கு எதிராகப் போராடுவது என்பதே அந்தப்பதில்.

ஏனெனில் தமிழ் மண்ணில் இந்தியா கால்வைக்கும்போது புலிகளைத் தவிர ஆயுதம் தாங்கிய எந்தவொரு இயக்கமும் இல்லை அத்துடன் புலிகளிடம்ஆயுதங்களை இந்தியா கேட்டுக்கொண்டிருந்த அதே வேளை ஏனைய இயக்கங்களை, குறிப்பாக ஒரு ''புளொட்'' பிரிவினரை ஆயுதங்களுடன் உலங்குவானூர்திகளில் கொண்டுவந்து இறக்கியது இந்தியாதான்

அதாவது இந்தியாவின் ஒரே நோக்கம் யுத்தத்திற்கான சூழலை உருவாக்குவது யுத்தத்தைத் தூண்டுவது, யுத்தத்திற்கான ஒரு காரணத்தை ஏற்படுத்துவது என்பதுதான்.

1987 யூலை 29ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர் 10 ஆம் திகதி வரையானஇந்தியாவின் நடவடிக்கைகள் அனைத்தும் ஆத்திரமூட்டக் கூடியவையாக அமைந்திருந்தன மேற்படி 73 நாட்களிலும் இந்தியா நடந்துகொண்ட விதம் பற்றிய ஆய்வுகள் எதனையும் அரசியல் ஆராய்ச்சியாளர்கள் யாரும் இதுவரை ஆய்வு செய்திருக்கவில்லை என்பது துரதிஷ்டவசமானது. உண்மையில்இந்த 73 நாட்களிலும் இந்தியா ஈழமண்ணில்நடந்துகொண்ட விதத்தை குறைந்தபட்சம் ஒழுங்காய்த் தொகுத்தாலே இதன் உண்மைகள் பட்டெனத் தெளிவாகும்.

இத்தகைய பின்னணியில் மேற்குறிப்பிடப்பட்ட நாட்களில் நசழ்ந்தநிகழ்வுகள் ஒன்றுதான் திலீபனது சாவு இந்தியா அதுவரை கூறிவந்த தனதுசகல''தர்மங்களுக்கும்'' திலீபனின் சாவின் மூலம் இறுதி ஆப்பை வைத்துக் கொண்டது. கொடியில் இருக்கும் தர்மசக்கரத்தை பொய்ப்பித்து விட்டுத் தூண் ஏறிய சிங்கமே தனது சுயரூபம் என்பதை மெய்ப்பித்தது.

### சாரணன்

திலீபனைக் சாகவிட்டதன் மூலம் அது போருக்கான சூழலைக் கனிய வைத்தது என்றே கூறலாம். புலிகளை ஒடுக்காமல் தமிழ்த் தேசிய எழுச்சியை நசுக்க முடியாது என்பதே இந்திய இராஜதந்திரிகளின் கணிப்பீடு எனவே யுத்தம் என்பது இந்தியா தேர்ந்தெடுத்துக் கொண்ட முடிந்த முடிபு.

இத்தகைய பின்னணியிற்தான் அப்பட்டமாக ஓர் ஒப்பந்த மீறலை புலேந்திரன், குமரப்பா உட்பட்ட பன்னிருவர் தொடர்பான சாவில் இந்தியா கடைப்பிடித்தது.

அரசியற் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு என ஒப்பந்தத்திற் கூறப்பட்டிருந்தாலும் ஒப்பந்தம் நிகழ்ந்து யுத்தம் தொடங்கும் காலம் வரையும் பல கைதிகள் தொடர்ந்தும் விடுதலை செய்யப்படாமலே இருந்தனர். இதில் இலங்கை அரசு ஒப்பந்தத்தை எவ்வாறு கௌரவித்தது? அதில் இந்தியாவின் பொறுப்பென்ன?



இவ்வாறு காரணச் சங்கிலி நீண்டு கொண்டே வந்தது. அதில் ஓர் இறுதிக் கொழுக்கியே மேற்குறிப்பிட்ட பன்னிருவர் விவகாரம்.

குமரப்பா உட்படக் கைது செய்யப்பட்ட இளைஞர்களை இலங்கை அரசிடம் கையளிக்கக் கூடாதென இந்திய இராணுவ அதிகாரிகள் இராஜதந்திரிகளைக் கோரினர். அவ்வாறான ஓர் நிகழ்வு இராணுவக் கண்ணோட்டத்தில் தமக்கொரு அவமானமாக இராணுவ அதிகாரிகள் கருதினர். தமது நரித்தனமான அரசியல் கண்ணோட்டத்தில் அதனை ஓர் அத்தியாவசியமானவிடயமாக டிக்சிற் முதலாய இராஜதந்திரிகள் கருதினர். அதே வேளை இது சம்பந்தமாக இலங்கை அரசியல்வாதிகளின் கணிப்பீடும் கண்ணோட்டமும் இதற்கு உடந்தையாகவே அமைந்துகொண்டது. இதில் சாணக்கியன் பாரம்பரியத்தைக் கொண்ட இந்திய இராஜதந்திரம் இலங்கை இராஜதந்திரிகளின் கால்களில் சறுக்கி வீழ்ந்தது.

இவ்வாறாக இந்தியா முன்கூட்டியே எடுத்துக்கொண்ட யுத்த முடிபுக்கும், இந்தியா இலங்கை இராஜதந்திரிகளின் இராஜதந்திரச் சதுரங்கத்திற்கும் இடையில் அகப்பட்ட ஒரு காயாக மேற்படி பன்னிருவர் விவகாரம் அமைந்தது.

யுத்தம் தொடங்கிய பின்பு எம் ஜி. ஆர். தனது மேலோட்டமான பார்வையால் பின்வருமாறு கூறினார். புலேந்திரன்குமரப்பா உட்பட புலிகளை இலங்கை அரசிடம் கையளிக்க முடியாதென்ற முடிவை இந்தியா எடுத்திருந்தால் யுத்தத்தைத் தவிர்த்திருக்கலாம் என்பது

''பராக்கிரமத்தைக் காட்டிப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம்'' என எண்ணினேன் என்ற டிக்சிற்றின் ஒப்புதல் வாக்குமூலம் மேற்படி சந்தேகங்களுக்கெல்லாம் இறுதி முடிவு கட்டினாற்போல் உள்ளது.

இலங்கை அரசின் ''லிபறேசன் ஒப்பறேசன்'' இற்குச் சற்று முன்பின்னாக யாழ்ப்பாணத்திலிருந்து பல ''கனவான்'' குழுக்கள் அடிக்கடி டிக்சிற்றைச் சந்தித்து வந்தன அக் கனவான் குழுக்களிடம் டிக்சிற் கூறிவைத்த வார்த்தைகள் எல்லாம் அவரது முன்கூட்டிய யுத்த முடிபுகளை வெளிக்காட்டியே நின்றன.

72 மணித்தியாலயத்துக்குள் புலிகளை நசுக்கிவிடலாம் என ராஜீவ் நம்பினார். ஒரு சப்பாத்துப் பிடிக்குள் தமிழரைக் கொண்டுவந்து விடவேண்டும் என்பது டிக்சிற்றின் விருப்பம். தமிழ் மண்ணில் தாம் அரசியல்நடத்த புலிகள் அழிக்கப்படவேண்டுமென அமிர்தலிங்கம் தலைமையிலான கூட்டணியினர் கருதினர். இவ்வாறு அமிர்தலிங்கம் அணியினரும், மற்றும் சிறு இயக்கங்களும் இந்தியா பக்கம் சாராது தமிழரின் அடிப்படை உரிமைப் பக்கமே நின்றிருந்தால் தம்மிடையேயான வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழரின் நலனையே முதன்மைப்படுத்தியிருந்தால் நிலைமை வேறு விதமாய் அமைந்திருக்கும் மேற்குறிப்பிட்ட பின்னணியில் வைத்தே புலேந்திரன், குமரப்பா உட்பட்ட பன்னிருவரது சாவையும் நோக்க வேண்டும்.

## ஈராக்கின் வெளிநாட்டு சொத்துக்கள்

## நினைவிலே நனையும்

ஆனால், நடந்தது. இந்திய- சிறிலங்கா ஒப்பந்தத்திற்கு கௌரவம் அளிப்பதாக ஒப்பந்தத்தின் பின் புலிகள் உறுதியளித்திருந்ததனால் இவ்வரலாற்றுப் பிறழ்வு நிகழ்ந்தது. ஒப்பந்தச் சரத்தின்படி தமக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்பதால் புலிகள் கைதாவதற்கு இணங்கினர்.

ஆனால், இந்தியாவும் - சிறிலங்காவும் ஒப்பந்தத்தை மதிக்கவில்லை. இந்தியா தமிழ்மக்களுக்கு துரோகம்செய்தது. சிறிலங்கா ஒப்பந்தத்தை மீறியது. தற்பாதுகாப்பிற்கான ஆயுதங்களை மட்டுமே வைத்திருந்த விடுதலைப்புலிகளை கைது செய்தது ஒரு தெட்டத்தெளிவான ஒப்பந்தமீறலாகும் இக்கைது நடந்தபின்னர், இந்தியா இதில் தலையிட்டு விடுதலைப் புலிகளை விடுவிக்காமை தமிழ்மக்களினதும், விடுதலைப் புலிகளினதும் பாதுகாப்பு தொடர்பாக அதன் நிலைப்பாட்டையும், துரோகத்தனத்தையும் வெளிக்காட்டுவதாகவும் இருந்தது

சிறிலங்காஇராணுவத்தைப்பொறுத்து தளபதிகள் புலேந்திரனும்,குமரப்பாவும்என்றுமே அச்சுறுத்தலாக இருந்தவர்களாகும் இவ்வளவு இலகுவாக இவ்விரு தளபதிகளையும் தன்னால் கைது செய்யமுடியும், அதுவும் உயிருடன் கைது செய்யமுடியும் என சிறிலங்கா இராணுவமோ அன்றி, அரசாங்கமோ எண்ணிக்கூட,ஏன் கற்பனை செய்து கூடப்பார்த்திருக்க மாட்டார்கள். இந்நிலையில், 'கைது' செய்யப்பட்ட தளபதிகளை விடுதலை செய்வதற்கு சிறிலங்கா தயாராக இருக்கவில்லை. இந்தியாவின் நிலைப்பாடு குறித்தும் சிறிங்லகா பெரிதும் அக்கறை காட்டவில்லை

ஏனெனில் இதற்கு முன்னர் நடந்த சில சம்பவங்களே விடுதலைப்புலிகள் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டை சிறிலங்கா புரிந்து கொள்ள வாய்ப்பாக இருந்தது. திலீபனின் உண்ணாவிரதத்தில் இந்தியா நடந்து கொண்டவிதமும் ஏனைய தமிழ்க்குழுக்களை ஆயுதபாணிகளாக்கி விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியா தூண்டிவிட்டமையும் சிறிலங்காவிற்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. இந்தியா இவ்விடயத்தில் எவ்வளவு தூரத்திற்குச் செல்லும் என்பதை அறியும் வரை தன்பிடியில் தளர்வை ஏற்படுத்த சிறிலங்கா விரும்பவில்லை

ஆனால் இந்தியா தமிழருக்கும் புலிகளுக்கும் நம்பிக்கைத்துரோகம்செய்தது இந்திய இராணுவத்தரப்பில்ஒருபகுதியினருக்கே இது ஆச்சரியமளிக்கும்ஒன்றாகவே இருந்தது. "இந்தியா விரும்பியிருப்பின் இராணுவ நிர்ப்பந்தத்தைப் பிரயோகித்தாவது புலிகளை விடுதலைசெய்திருக்கலாம்" என ஓர் இந்திய இராணுவ அதிகாரி அங்கலாய்த்தார்.

ஆனால் இந்திய உளவுத்துறையினரதும், அரசியல் தலைமையினதும் எதிர்காலத்திட்டத்தை புரிந்துகொள்ளாத ஓர் இராணுவ அதிகாரியின் அங்கலாய்ப்பு இதுவாகும்.

அதாவது, தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் மரணம் இந்தியா சிறிலங்கா அரசுகளின் கூட்டுச்சதி என்றே கூறலாம். விடுதலைப் புலிகளுக்கு எதிராக எவ்வளவு விரைவில் போரை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவில் போரை நடத்த எண்ணியிருந்த இந்திய உளவுத்துறையான 'றோ' வினதும். அரசியல் தலைமையினதும் திட்டங்களும், அதனை தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சிறிலங்காவினுடைய நடவடிக்கைகளினதும் விளைவே பன்னிரு வேங்கைகளின் வீரச்சாவாகும். அதாவது, தமிழீழப் போராட்டத்தை நசுக்க இந்தியாவும்-சிறிலங்காவும் மேற்கொண்ட சதியின் ஓர்அங்கமாகும்.

இற்கு ஒரு மாதத்திற்கு முன்பு பின்வருமாறு கூறினார்;

"பிரபாகரனிடம் போய்ச் சொல்லு, நாங்கள் யுத்தத்திற்குத் தயாராம் என்று"

மேலும் டிக்சிற்றுடன் ஆங்கிலப்பத் திரிகையாளர் கலந்து கொண்ட பத்திரிகையாளர் மகாநாடொன்றில் அவரிடம் கேட்கப்பட்ட பல கேள்விகளில் ஒன்று இராணுவத்தை கட்டுப்படுத்துவதற்கென்றால் இலங்கை இராணுவத்தின் முகாம்களுக்கு அருகே மட்டும் முகாம்களை அமைத்தாற் போதும் தானே! ஏன் எங்குப் பரவலாக பல முகாம்களை

ஏனெனில் தமிழ் மண்ணில் இந்தியா கால்வைக்கும்போது புலிகளைத் தவிர ஆயுதம் தாங்கிய எந்தவொரு இயக்கமும் இல்லை அத்துடன் புலிகளிடம் ஆயுதங்களை இந்தியா கேட்டுக்கொண்டிருந்த அதே வேளை ஏனைய இயக்கங்களை, குறிப்பாக ஒரு "புளொட்" பிரிவினரை ஆயுதங்களுடன் உலங்குவானூர்திகளில் கொண்டுவந்து இறக்கியது இந்தியாதான்

அதாவது இந்தியாவின் ஒரே நோக்கம் யுத்தத்திற்கான சூழலை உருவாக்குவது யுத்தத்தைத் தூண்டுவது, யுத்

என்றே கூறலாம். புலிகளை ஒடுக்காமல் தமிழ்த் தேசிய எழுச்சியை நசுக்க முடியாது என்பதே இந்திய இராஜதந்திரிகளின் கணிப்பீடு எனவே யுத்தம் என்பது இந்தியா தேர்ந்தெடுத்துக் கொண்ட முடிந்த முடிபு.

இத்தகைய பின்னணியிற்தான் அப்பட்டமாக ஓர் ஒப்பந்த மீறலை புலேந்திரன், குமரப்பா உட்பட்ட பன்னிருவர் தொடர்பான சாவில் இந்தியா கடைப்பிடித்தது.

அரசியற் கைதிகளுக்கு பொது மன்னிப்பு என ஒப்பந்தத்திற் கூறப்பட்டிருந்தாலும்

காரிகள் கருதினர். தமது நரித்தனமான அரசியல் கண்ணோட்டத்தில் அதனை ஓர் அத்தியாவசியமானவிடயமாக டிக்சிற் முதலாய இராஜதந்திரிகள் கருதினர். அதே வேளை இது சம்பந்தமாக இலங்கை அரசியல்வாதிகளின் கணிப்பீடும் கண்ணோட்டமும் இதற்கு உடந்தையாகவே அமைந்து கொண்டது. இதில் சாணக்கியன் பாரம்பரியத்தைக் கொண்ட இந்திய இராஜதந்திரம் இலங்கை இராஜதந்திரிகளின் கால்களில் சறுக்கி வீழ்ந்தது.

இவ்வாறாக இந்தியா முன்

லிங்கம் தலைமையிலான கூட்டணியினர் கருதினர். இவ்வாறு அமிர்தலிங்கம் அணியினரும், மற்றும் சிறு இயக்கங்களும் இந்தியா பக்கம் சாராது தமிழரின் அடிப்படை உரிமைப் பக்கமே நின்றிருந்தால் தம்மிடையேயான வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழரின் நலனையே முதன்மைப்படுத்தியிருந்தால் நிலைமை வேறு விதமாய் அமைந்திருக்கும் மேற்குறிப்பிட்ட பின்னணியில் வைத்தே புலேந்திரன், குமரப்பா உட்பட்ட பன்னிருவரது சாவையும் நோக்க வேண்டும்.

# ஈராக்கின் வெளிநாட்டு சொத்துக்கள் ஐ. நா. மன்றம் சுவீகரிக்கும்

(வாஷிங்டன்)

ஈராக்கின் வெளிநாட்டுச் சொத்துக்களைப் பறிக்கும் ஐ நா. மன்றத்தின் தீர்மானத்தை ஈராக் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஈராக்கில் ஐ நா. செய்யும் பணிச் செலவுக்காவும் வளைகுடாப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டு உதவி வழங்குவதற்காகவுமே ஈராக்கின் வெளிநாட்டுச் சொத்துக்கள் சில பறிக்கப்படவுள்ளன.

ஐ.நா மன்றம் ஒரு நாட்டின் சொத்துக்களைப் பறிப்பது இதுவே முதற் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாகப் பாதுகாப்புச்சபை எடுத்த வாக்கெடுப்பில் பதினான்கு உறுப்பு நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன. ஒரு நாடும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கவில்லை.சீனா வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை.

ஈராக் இழப்பீடு சம்பந்தமாக ஐ நா.வுடன் ஒத்துழைக்க மறுத்ததாலேயே இந்தத் தீர்மானம் என்று மேற்குலக நாடுகள் கூறுகின்றன.

## கள்ளச் சாராயம் பற்றி பேசிய
## சட்டமன்ற உறுப்பினர் வீடு பொலிசாரால் சோதனை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்ட மன்ற உறுப்பினர் கு. பழனிச்சாமிசட்ட மன்றத்தில் கள்ளச் சாராயவியாபாரம்பற்றிப் பேசியதற்காக தமிழ்நாடு மது விலக்கும் பொலிஸ் அவர் வீட்டில் தேடுதல் நடத்தியது.

தஞ்சாவூர்மாவட்டம் திருத்தணித்துறையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநில நிர்வாகக் குழு உறுப்பினரும், சட்ட மன்ற உறுப்பினருமானபழனிச்சாமியின் வீட்டுக்கு சென்று அவர் வீட்டில் சாராயம் இருக்கிறதா என்று மது விலக்கும் பொலிஸார் சோதனையிட்டுள்ளனர் என்று இத்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழு அறிக்கை ஒன்று கூறுகின்றது.

சட்ட மன்றத்தில் கள்ளச் சாராயம் பற்றி அவர் பேசியதற்காக அவர் மீது குற்றம் சுமத்தவும், அவரை அச்சுறுத்தவும் இச்செயல் நடைபெற்றுளளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து அவர் மனைவியை அச்சுறுத்தி இந்தச் செயல் நடைபெற்றிருப்பதாக இந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

பழனிச்சாமியின் வீட்டில் சோதனை நடத்தியிருப்பதற்கு மார்சசிய கம்யூனிஸ்ட் கட்சியும் கண்டனம் தெரிவித்துள்ளது. இத்தகைய போக்கை ஜெயலலிதா அரசு கைவிட வேண்டும் என்று மார்க்சிய கம்யூனிஸ்ட்கட்சியின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

## கொர்பசேவ் வெளிநாடு செல்லத்தடை

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியை தடைசெய்வது குறித்ததான வழக்கொன்றில் சாட்சியமளிக்க மறுத்தமைக்காக முன்னாள் சோவியத் அதிபர் மிகையில் கொர்பசேவ் அவர்களின் கடவுச்சீட்டு முடக்கி வைக்கப்பட்டுள்ளது கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான மிகையில் கொர்பசேவ் வெளிநாடுகளுக்கு செல்வதைத்தடுப்பதற்கே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டதாக மாஸ்கோவில் அரசு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## ஸ்டார்ட் உடன்பாடு அமெரிக்க செனட் ஏற்பு

போர் முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களை குறைப்பது தொடர்பான உடன்பாட்டை (ஸ்டார்ட் உடன்பாடு) அமெரிக்க செனட் சபை அங்கீகரித்து விட்டது. தொண்ணூற்று மூன்று வாக்குகள்இந்த ஒப்பந்தத்திற்கு ஆதரவாகவும் ஆறு வாக்குகள் மட்டுமே எதிராகவும் கிடைத்தன. விரைவில் இந்த உடன்பாட்டை ரஷ்யப் பாராளுமன்றமும் அங்கீகரிக்கும் என்று எதர்பார்க்கப்படுகிறது

## ஜேர்மன் - பிரிட்டன் முரண்பாட்டை நீக்க முயற்சி

(பிரெஸ்ஸல்ஸ்)

ஜேர்மனிக்கும், பிரிட்டனுக்கும் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க ஐரோப்பிய சமுதாய வெளியுறவு அமைச்சர்கள் லட்சம்பேர்க்கில் நாளை சந்திக்க உள்ளனர். இம்மாத நடுப்பகுதியில் ஐரோப்பிய சமுதாயத்தின் உச்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்பாகவே பிரிட்டனும, ஜேர்மனியும் தமது கருத்து முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்வதுஅவசியம் என்று பிரெஸ்ஸல்ஸில் எதிர்பார்க்கப்படுகிறது.

## நினைவிலே நனையும் 5 ஆவது ஆண்டு

05 10-87 இல் இந்திய வல்லாதிக்கத்தின் துரோகத்தனத்திற்கு இரையாகிப்போன மறக்க வொண்ணா மாவீரர்கள்

| | | |
|---|---|---|
| லெப். கேணல் | — | குமரப்பா |
| லெப். கேணல் | — | புலேந்திரன் |
| மேஜர் | — | அப்துல்லா |
| கப்டன் | — | பழனி |
| கப்டன் | — | ரகு |
| கப்டன் | — | நளன் |
| 2-ம் லெப். | — | றெஜினோல்ட் |
| 2-ம் லெப். | — | ஆனந்தக்குமார் |
| கப்டன் | — | கரன் |
| லெப். | — | தவக்குமார் |
| லெப். | — | அன்பழகன் |
| கப்டன் | — | மிரேஷ் |

ஆகிய மறவேங்கைகளை நினைவுகூரும் இந்நாளில் அழுத்தமாய்ப் பதிந்திருக்கும் அவர் நினைவுகளை மீண்டுமொருக்கால் புதுப்பித்துக் கொள்கின்றோம்.

## திசையெலாம் மணக்கின்றீரே

இந்திய வல்லாதிக்கம் — தமிழ்
ஈழ மண் தனக் கிழைத்த
நஞ்சனை துரோகத் தாலே
நாமுமை இழந்தோம்! ஆனால்!
நெஞ்சினில் வாடாப் பூவாய்
நித்தமும் நிலைகொண்டுள்ளீர்!
வெஞ்சமர்க் களத்தே நிற்கும்
வேங்கைகட் குயிர் மூச்சானீர்!

போனதோ ஆண்டோர் ஐந்து!
போகலாம் இன்னும் நூறு!
மானமே பெரிது, வீர
மறவருக் கென்றுரைத்துப்
போனவர், புலிகள் நீங்கள்!
புத்தொளிச் சுடராம் நீங்கள்!
தேனிகர் தமிழீழத்தின்
திசையெலாம் மணக்கின்றீரே!

தமிழீழ விடுதலைப் புலிகள்,

திருமலைத் தொடர்பகம்,

கொக்குவில்.

# ஈழநாதம்

### தேர் உற்சவம்

வரலாற்று புகழ் மிகுந்த வண்ணை - ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ரதபவனி இன்று காலை 9-15 மணிக்குச் நடைபெறும்

தீர்த்தத் திருவிழா நாளை செவ்வாய்ச்கிழமை முற்பகல் 10-00 மணிககும் திருக்கல்யாணம் நாளை மறுதினம் (7-9-92) புதன்கிழமையும் நடைபெறும்

### சென்னை விஜயம்

(சென்னை)

இலங்கையின் இந்திய இராணுவத்தின் தளபதியாக பணிபுரிந்தவரும், தற்போது இந்திய இராணுவத்தின் தென்மண்டல தளபதியாக இருப்பவருமான லெப். ஜெனரல் ஏ. எஸ் கல்கத் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சென்னை வந்துள்ளார் இவர் சென்னையில் தங்கியிருக்கும் போது மூத்த இராணுவ அதிகாரிகளோடு பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார்.

### பதவி நீக்கக் கோரிக்கை

(டில்லி)

ஜனதா தளக்கட்சியின் தலைமை மீது அதிருப்தி கொண்டுள்ள இருபது பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவி நீக்கம் செய்யுமாறு அக்கட்சி கோரியுள்ளது.

அஜீத்சிங், உட்பட மற்றும் பத்தொன்பது பேருக்கு எதிராக ஜனதா தளம் சபாநாயகரிடம் கொடுத்துள்ள மனுவொன்றில் இக்கோரிக்கையை எழுப்பியுள்ளது.

## தீவிரவாதத்தை கட்டுப்படுத்த சார்க் அமைப்பு உதவும்

### இந்தியா - சிறிலங்கா கூட்டறிக்கை

தீவிரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக தெற்கு ஆசிய நாடுகளின் ஆற்றலை மேம்படுத்த சார்க் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு பெரிதும் உதவும் என்றும் இந்தியாவும் சிறிலங்காவும் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்தியாவில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மூன்று நாள் சுற்றுப் பயணத்தின் இறுதியில் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் முறையான ஆலோசனைக் கலப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கிடையே தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்வது போன்ற முன்னெச்சரிக்கைகள் நடவடிக்கை வாயிலாக இதை எட்ட முடியும் என்று இருதரப்பினரும் உணர்ந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்தி அமைதியான தீர்வொன்றைக் காண்பதற்கு தமதுஅரசு உறுதி பூண்டிருப்பதாக பிரதம மந்திரி பி.வி நரசிம்மராவ்வுடன பேசும் போது ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் விடயத்தில் தங்கள் திருப்தியை வெளியிட்ட இரு தலைவர்களும் அகதிகளை விரைவாகவும் சீராகவும் அனுப்பி வைக்க தொடர்ந்து ஒத்துழைப்பது என்றும் ஒப்புக் கொண்டனர்.

அனைத்துத் துறைகளிலும் மேம்பாட்டைக்காணச் சார்க் அமைப்பு மிக முக்கியமானது என்று இரு தலைவர்களும் கூறினார்கள்.

## சட்டமன்ற உறுப்பினர் பதவி ராஜாராம் இழக்க நேரிடலாம்

(சென்னை)

- முனு ஆதி

தமிழக முதல்வருக்கு எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் முன்னாள் அமைச்சரும், அ. இ. அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினருமான க. ராஜாராம் பேசியிருப்பதால் அவருக்கு எதிராகக் கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று அ. இ. அ. தி. மு. கட்சியின் அமைப்புச் செயலாளர் முனு ஆதி கூறியுள்ளார். அவர் மேலும் பேசுகையில், ராஜாராம் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிடலாம் என்றும் குறிப்பிட்டார்.

## பிரேசில் சிறையில் கலவரம் நூற்றுக்குமேற்பட்டோர்பலி

பிரேசில் சிறைச்சாலை ஒன்றில் மூண்ட கலகத்தையடுத்து நூற்றுக்கும் அதிகமான சிறைக் கைதிகள் மரணமடைந்து உள்ளனர். நிலைமையைகட்டுப்படுத்த முயன்ற துருப்புக்களில்மூப்பத்திநான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று மாலை சிறைக்குள் இருந்த போட்டிக் குழுக்களுககு இடையே மோதல் மூண்டதாகவும் இம் மோதல் சிறையின் பிற பகுதிகளுக்கும் பரவியதால் கத்திகளைக் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கினர் என்றும், தெரிவிக்கப்படுகிறது. சிறைச்சாலையின் சில உடைமைகளும் சேதமாக்கப்பட்டதோடு தீக்கிரையாக்கவும் பட்டன.

கலகததையடக்குவதற்கு இராணுவப் பொலிஸ், மற்றும் ஹெலிகொப்டர்கள் என்பன உடனடியாக அழைக்சப்பட்டு நிலைமை நான்கு மணித்தியாலங்களின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது,

லத்தீன் அமெரிக்காவிலேயே இந்தச் சிறை பெரியது எனவும், சுமார் ஏழாயிரத்து ஐநூறு பேருக்கு மேல் தடுத்து வைக்கும் வசதியுடையது எனவும் தெரியவருகிறது.

### பங்களாதேஷில் பிரேமா

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாச பூட்டானிலிருந்து நேற்று பங்களாதேஷ் பேய்ச் சேர்ந்தார். இவரின் தற்போதைய சுற்றுப் பயணத்திட்டத்தின் இறுதி நாடு பங்களாதேஷ் ஆகும்

இவர் இன்று பங்களாதேஷ் பிரதமர் பேகம்கலிதா ஷியாவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார் என தெரிவிக்கப்படுகிறது.

### 200 உணவு

...களைக் கழற்றிக் கைப்பற்றுகிறது என்ற காரணத்தினால் தமது லொறியில் உள்ள பற்றிகளைக் கழற்றி வைத்துவிட்டுப்போன லொறி உரிமையாளர்களின் லொறிகளே தடுத்துவைக்கப்பட்டுள்ளன

இராணுவத்தின் இந்நடவடிக்கையினால் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுவர முடியாமல் லொறி உரிமையாளர் தவிக்கின்றனர். (தி)

### மீட்புநிதி

தலைவரின் ஆளுமையும், தூரநோக்கும், விடுதலைப் புலிகளின் வீரமும், ஈகமும் மட்டுமன்றி எதுநடந்தாலும் இறுதிவரை எம்மண்ணிலேயே வாழ்வோம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வரும்தமிழீழ மக்களின் மன உறுதியும், பங்களிப்புமேயாகும்.

பல்வேறு நெருக்கடிகளை

### யுத்தம்

இல்லை என்பதை நாம் உணர்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### மட்டக்களப்பு

பகுதி சிறிலங்கா பொலிஸ் காவல் நிலைக்கு அண்மையில் அமைந்துள்ள பல வீடுகளை இராணுவத்தினரும் பொலீசாரும் இணைந்து சோதனையிட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம்வரை தேடுதல் நடைபெற்றது

துணை ஒதுக்கீடினூடாக 2,000 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது ஆண்டு முடிவில் உண்மையான செலவினம் 2,000 கோடி ரூபாவை விஞ்சிவிடலாம்.

எம்மைப் பொறுத்தவரை மிகக் குறைந்த வளங்களுடன் சிறிலங்கா அரசின் பொருண்மியத் (பொருளாதாரம்) தடைகளுக்கு இடையே 2,000

### சிறிலங்கா சிறைகளில்

## தடுப்புக் காவல் கைதிகள் சாகும்வரை உண்ணா விரதம்

சிறிலங்காவின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரககணக்கான இளைஞர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளையும் வீரவில, பெலவத்தை தடுப்பு முகாம்களில் உள்ள இளைஞர்கள் சாகும் வரையான உண்ணா விரதம் ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள் என்ற விபரங்களையும் லண்டனில் மத்திய நிலையத்தை கொண்டுள்ள சிறிலங்காவின் ஜனநாயக மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கம் பி. பி. லிக்கு கடந்த வியாளன்று எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது.

குற்றம் செய்யப்பட்டிருப்பின் வழக்கு தொடுக்கவும்; அப்படியில்லாவிடின் விடுதலை செய்யவும் தமது உயிருக்கு உத்தரவாதம் வழங்கவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

இக்கோரிக்கைகள் ஒரு மாதத்துள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அடுத்த கட்டமாக சாகும்வரை உண்ணா விரதம் ஆரமபிக்கப்படும் என தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது

இதுபற்றி பிரிகேடியர் ஆனந்த வீரசேகரவுடன் தொடர்பு கொண்டு கேட்கப்பட்டபோது மேற்படி விபரங்களைத் தெரிவித்த அவர் இறுதியாக பின்வருமாறு குறிப்பிட்டார். ''உண்மையில் தடுப்புக் காவலில் உள்ளோருக்கு மிகக் குறைந்த வசதிகள் தான் வழங்கப்பட்டுள்ளன. இது வேதனைக்குரியது. உண்மையில் நான் பெலவத்தை தடுப்பு முகாமில் இருந்தாலும் நானும் சுரங்கம் கிண்டித்தான தப்பிப் போயிருப்பேன்'' எனவும் தெரிவித்தார்.

### ஏழு அகதிகள் செங்கல பட்டில் கைது

செங்கல் பட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமில் இருந்த ஏழு தமிழர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாய்த் தெரிய வருகிறது.

மதுரையில் சப் இன்ஸ்பெக்டர் கொலை தொடர்பாயும், இவர்களின் ஏனைய விடயங்கள் சம்பந்தமாயும் விசாரிக்கப்பட்டனர். இவர்கள் வேறு முகாம்களில் இருந்து வந்து செங்கல் பட்டில் தங்கியதாகவும் தெரிய வருகிறது,

### யாழ். மாவட்ட பாடசாலைகளில்

## கோட்டரீதியாக இன்று மரம் நடுகை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் மரநடுகைத் திட்டம் இன்று காலை 8. 00 மணிக்கு கோட்டரீதியாக ஆரம்பமாகிறது

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பாடசாலை மாணவர்களுக்கான மரநடுகைப் போட்டித் திட்டம் தொடர்பான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததைத் தொடர்ந்து இம்மரநடுகைத் திட்டம் இன்று கோட்டங்கள் மற்றும் கொத்தணிகள் ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் இம் மரநடுகைத் திட்டத்திற்கென முப்பது இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தெரிவித்துள்ளது.

### மின்னல் தாக்கி மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடல்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த படகுமீது மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்

நேற்று அதிகாலை நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் குருநகர் றெகிளமேசனைச் சேர்ந்த சவுரியான்குட்டி ரவீந்திரன் (வயது 33) என்பவரே பலியானவராவார் இவருடன் கூடச் சென்ற சகோதரரான சவுரியான்குட்டி செல்வா (வயது 31) என்பவர்


## முகவரால் ஏமாற்றப்பட்ட இளைஞர்கள் தவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றப்படுவிட்ட பெருந்தொகையான இளைஞர்கள் சிங்கப்பூரில் அவலமுற்றுத் தவிப்பதாகத் தெரியவருகிறது.

தலா 70,000 ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரையிலான பணத்தைப் பெற்றுக்கொண்ட போலி வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டு சிங்கப்பூரில் அநாதரவாக விடப்பட்ட பலர் தற்போது சிங்கப்பூரில் இருக்கும் சிறிலங்கா தூதுவரகத்துடன் தொடர்பு கொண்டு தமது கண்ணீர்க் கதைகளைக் கூறிவருவதாகத் தெரியவருகிறது.

## 3-ம் ஆண்டு நினைவு



யடுத்து நிற்றுக்கும் அதிக மான சிறைக் கைதிகள் மரண மடைந்து உள்ளனர். நிலை மையைகட்டுப்படுத்த முயன்ற துருப்புக்களில் முப்பதிநான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை யன்று மாலை சிறைக்குள் இருந்த போட்டிக் குழுக்க ளுக்கு இடையே மோதல் மூண் டதாகவும் இம் மோதல் சிறை யின் பிற பகுதிகளுக்கும் பர வியதால் கத்திகளைக் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கினர் என்றும், தெரிவிக் கப்படுகிறது. சிறைச்சாலை யின் சில உடைமைகளும் சேத மாக்கப்பட்டதோடு தீக்கிரை யாக்கவும் பட்டன.

கலகத்தையடக்குவதற்கு இராணுவப் பொலிஸ், மற்றும் ஹெலிகொப்டர்கள் என்பன உடனடியாக அழைக்கப்பட்டு நிலைமை நான்கு மணித்தி பட்டது.

லத்தீன் அமெரிக்காவிலேயே இந்தச் சிறை பெரியது என வும், சுமார் ஏழாயிரத்து ஐநூறு பேருக்கு மேல் தடுத்து வைக்கும் வசதியுடையது என வும் தெரியவருகிறது.

### பங்களாதேஷில் பிரேமா

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாச பூட்டானிலிருந்து நேற்று பங்களாதேஷ் பயணம் சென்றார். இவரின் தற்போ தைய சுற்றுப் பயணத்திட்டத் தின் இறுதி நாடு பங்களா தேஷ் ஆகும்.

இவர் இன்று பங்களாதேஷ் பிரதமர் பேகம்கலிதா ஷியா வுடன் பேச்சுவார்த்தை நடா த்துவார் என தெரிவிக்கப்படு கிறது.

## மரண அறிவித்தல்

அமரர்

## வடிவேலு கணேசமூர்த்தி

(முன்னாள் பருத்தித்துறை கணேஸ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் V. V K.)

பருத்தித்துறை தும்பளை வீதி, கல்லடி ஒழுங்கை யைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அவுஸ்திரேலியா வில் வாழ்ந்து வந்தவருமான அமரர் வ. வடிவேலு கணேசமூர்த்தி அவுஸ்திரேலியாவில் அவரது இல்லத்தில் 01 - 10 - 1992 இல் காலமானார்.

இவர் சிவரத்தினத்தின் அன்புக் கணவரும், புவ னேந்திரராசா (அவுஸ்திரேலியா), தெய்வேந்திரராசா (அவுஸ்திரேலியா), தனேந்திரராசா (அவுஸ்திரேலியா), சரஸ்வதி (பருத்தித்துறை). விக்னேஸ்வரமூர்த்தி (அவுஸ் திரேலியா), பாக்கியலக்ஷ்மி (ஜேர்மனி), சிவசோதி (அவுஸ்திரேலியா), ரமணி (அவுஸ்திரேலியா) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும்,

மங்களேஸ்வரி (அவுஸ்திரேலியா), சாந்தி (அவுஸ்தி ரேலியா), மஞ்சுளா (அவுஸ்திரேலியா), சத்தியமூர்த்தி (பருத்தித்துறை, கவிதா ரேடர்ஸ், உரிமையாளர்), கிருஷ் ணகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும்,

சிவா (அவுஸ்திரேலியா), உமா (அவுஸ்திரேலியா), கவிதா, கஜேந்திரன், கோபிநாத், அனுஷா, ரேணுகா (அவுஸ்திரேலியா), ரஞ்சித் (அவுஸ்திரேலியா), நிஷாந் தன் (ஜேர்மனி), டிலானி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும்,

செல்வராசா (செல்வராசா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் பருத்தித்துறை) ராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோ தரரும், சிவயோகமலர், காலஞ்சென்ற பாலசுப்பிரமணி யம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 01 - 10 - 1992 அன்று கீழ்வரும் முகவரியில் (அவுஸ்திரேலியாவில்) அவரது இல்லத்தில் நடைபெற்றது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அவுஸ்திரேலியா முகவரி,
*No. 02,*
*EULALIA ST.*
*WEST RYDE -2114,*
*AUSTRALIA.*

தகவல்:
சி. சத்தியமூர்த்தி
(மருமகன்)
கவிதா ரேடர்ஸ் உரிமையாளர்
பருத்தித்துறை.
துப்பளை வீதி,
கல்லடி ஒழுங்கை,
பருத்திததுறை.

[3316]

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

கிறது என்ற காரணத்தினால் தமது லொறியில் உள்ள பற் றிகளைக் கழற்றி வைத்து விட்டுப்போன லொறி உரிமை யாளர்களின் லொறிகளே தடுத்துவைக்கப்பட்டுள்ளன

இராணுவத்தின் இந்நடவடி க்கையினால் அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுவர முடியாமல் லொறி உரிமை யாளர் தவிக்கின்றனர். (தி)

### மீட்புநிதி

தலைவரின் ஆளுமையும், தூர நோக்கும், விடுதலைப் புலிக ளின் வீரமும், ஈகமும் மட்டு மன்றி எதுநடந்தாலும் இறுதி வரை எம்மண்ணிலேயே வாழ் வோம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து வரும் தமிழீழ மக்க ளின் மன உறுதியும், பங்க ளிப்புமேயாகும்.

பல்வேறு நெருக்கடிகளை விடுதலைப் புலிகள் எதிர் கொண்ட போதெல்லாம் பக் கத்துணையாய், பங்காளர்க ளாய், காவலரணாய்நின்றவர் கள் தமிழீழ மக்கள்.

1983 ஜூலை23 இல்சிங்களப் படையினர் 13 பேர் கொல்லப் பட்ட போது தமிழீழத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்ட னர் தமிழ்ப் பெண்கள் பலர் பாலியல் வன்முறைக்கு உட் படுத்தப்பட்டனர். பல்லாயி ரம் கோடிரூபா பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப் பட்டன தமிழர்கள் தஞ்சம் தேடி தமிழீழத்துக்கு ஓடி வந் வந்தனர். சிறிலங்கா அரசு அந்தக்கலவரத்தின் பின்னணி யில் இருந்து செயற்பட்டது.

1983 ற்குப் பின்னர் இன்று வரை ஆயிரக்கணக்கில் சிங்க ளப்படையினர் போரில் கொல்லப்பட்டுள்ளனர். 08-08-92 அன்று சிங்களப் படையின் அதிஉயர் தளபதி கள் உட்பட 10 பேர் கொல் லப்பட்டனர். அன்று தமிழர் களுக்கு எதிராக ஏவிவிடப் பட்ட வன்முறை வெறியாட் டம் இன்று சிங்கள அரசுக்கு எதிராகத் திரும்பியுள்ளது இந்தக் கலவரத்தில் அமைச்சர் கள் தாக்கப்பட்டுள்ளனர், அரச சொத்துக்கள் அழிக்கப் பட்டுள்ளன சிங்கள அரசியலா ளர்கள் தமிழர்களைப் பகடைக் காயாக பயன்படுத்திய காலம் மலையேறி விட்டது என்ற உண்மை இதிலிருந்து புலனா கிறது. சிங்களவரின் இத்தகைய மனமாற்றம் விடுதலைப்புலி களின் வீரம் செறிந்த போரின் விளைவேயன்றி வேறில்லை

1977-ம் ஆண்டு சிறிலங்கா அரசின் உண்மையான பாது காப்புச் செலவினம் 43 கோடி 58 நூறாயிரம் (இலட்சம்) ரூபாவாகும். 1991 இல் இத் தொகை 1566 கோடி 37 நூறாயிரம் ரூபா. 1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டப் பாதுகாப்புச்செலவின ஒதுக்கீடு1 542 கோடி 40நூறா யிரம் ரூபா. இத் தொகை

... பிட்டார்.

### மட்டக்களப்பு

பகுதி சிறிலங்கா பொலிஸ் காவல் நிலைக்கு அண்மையில் அமைந்துள்ள பல வீடுகளை இராணுவத்தினரும் பொலி சாரும் இணைந்து சோதனை யிட்டனர்.

சுமார் ஒரு மணி நேரம்வரை தேடுதல் நடைபெற்றது

துணை ஒதுக்கீட்டினூடாக 2,000 கோடி ரூபாவாக அதி கரிக்கப்பட்டுள்ளது ஆண்டு முடிவில் உண்மையான செல வினம் 2 000 கோடி ரூபாவை விஞ்சிவிடலாம்.

எம்மைப் பொறுத்தவரை மிகக் குறைந்த வளங்களுடன் சிறிலங்கா அரசின் பொருண் மியத் (பொருளாதாரம்) தடைகளுக்கு இடையே 2,000 கோடி ரூபாவை செலவு செய் யும் சிங்கள அரசபடையுடன் போர்புரிகிறோம். நடைபெற் றுக் கொண்டிருக்கும் விடுத லைப் போர் தமிழீழத்தின் விடுதலைக்காக தமிழீழ மக்க ளால் நடாத்தப்படும போரே யாகும் போரில் வெற்றிபெறு வதற்கு தமிழீழமக்கள் தம்மா லான அனைத்தையும் செய்ய வேண்டும் இது அவர்களது வரலாற்றுக்கடமையாகும்.

தமிழீழ மீட்பு நிதிக்கான கடனை நாம் திரட்டத் தொடங்கிய போது இக்கட னைத் திருப்பித் தருவார்களா என்று ஐயப்பட்டவர்களும் உண்டு ஆனால் நாம்திருப்பிச் செலுத்திவருகிறோம். தமிழீழ மீட்பு நிதிக்கு உதவக்கூடாது என்ற நோக்கம் கொண்டிரு ந்த வசதிபடைத்த சிலரிடம் நாம் இரண்டு பவுணுக்கு மேலாக வற்புறுத்தி வாங்கி யது உண்மையே.

நாம் கடனை மீளளிக்கத் தொடங்கியவுடன் இது ஒரு ஏமாற்று வேலை என்றார்கள் சிலர். ஆயினும் தொடர்ந்தும் நாம் மீளளித்து வருகிறோம் பொறுக்க முடியவில்லை, மீண் டும் கூடுதலாகப் பெறுவதற் காகவே இரண்டு பவுணை நாம் மீளளிப்பதாக கதை களைக் கட்டிவிட்டார்கள் இதனால் கடனை மீளளிப்ப தற்காக தேர்ந்தெடுக்கப் பட் டவர்களிற் சிலர் மீளப்பெறு வதற்குத் தயங்கினார்கள். ஆனால் மீண்டும் மீண்டும் அவர்களுக்கு உண்மை நிலை யைத் தெளிவுபடுத்தி திருப்பிக் கொடுத்துள்ளோம்.

இந்த நேரத்தில் இதுவரை மீட்பு நிதிக்கடன் திட்டத்திற் பங்கேற்காத வசதி உள்ளவர் கள் 10,000 ரூபாவை மட்டும் கடனாகத் தந்துதவி தமிழீழ விடுதலைப் போரில் தங்கள் பங்களிப்பைச் செய்வதற்கு ஒரு வாய்ப்பைத் தர முடிவு செய்து உள்ளோம். இந்த வாய்ப்பினை பயன்படுத்து மாறு வசதியுள்ள அனைவரை யும் வேண்டி நிற்கிறோம்.

தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் இம் மரநடுகைத் திட்டத்திற்கென முப்பது இலட்சம் ரூபா ஒதுக்

### மின்னல் தாக்கி மீனவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக்கடல்பரப் பில் மீன்பிடித்துக் கொண்டி ருந்த படகுமீது மின்னல் தாக் கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்

நேற்று அதிகாலை நடை பெற்ற மேற்படி சம்பவத்தில் குருநகர் றெக்கிள மேசனைச் சேர்ந்த சவுரியான்குட்டி ரவீந் திரன் (வயது 33) என்பவரே பலியானவராவார் இவரு டன் கூடச்சென்ற சகோதர ரான சவுரியான்குட்டி செல்வா (வயது 31) என்பவர் படுகாயமடைந்தார் இவர் தற்போது சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார், (21, பா)

### 5 கோடி

5 கோடி ரூபா பெறுமதி யான ஆயுதங்களை இழந்தமை சம்பந்தமாக பூரண விசா ரணை நடாத்தப்படும் பொறுப்பான அதிகாரிகள் தமது கடமைகளை சரிவர செய்யவில்லை என கண்டுபிடி க்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் படுவதற்காக இராணுவ நீதி மன்றின் முன் நிறுத்தப்படுவர் எனவும் இராணுவ வட்டார ங்கள் தெரிவித்ததாக 'சன்டே ரைம்ஸ்' தெரிவித் துளளது

விமான எதிர்ப்பு துப்பாக்கி கள், இலகு இயந்திரத்துப் பாக்கிகள் 02 மோட்டார் ஒன்று, 180 பெல்ஜியம் தயா ரிப்பு நவீன துப்பாக்கிகள், 280 றொக்கற்றுக்கள், பெருந் தொகையான கைக்குண்டு கள் பல்வேறு ரகங்களைச் சேர்ந்த 3 இலட்சம் சுற்று ரவைகள், 2 வாகனங்கள் என் பன எடுத்துச் செல்லப்பட்டுள் ளன என்றும் கைப்பற் றிய வாகனங்களிலேயே புலிகள் தப்பிச் சென்றனர் எனவும் மேலும் தெரிவித்துள் ளது.

### பாகிஸ்தான்

தரப்பு வர்த்தக உறவுகளில் பின்னடைவு ஏற்படலாம் என்று கொழும்பு வர்த்தக வட்டாரங்கள் அச்சம் தெரி வித்துள்ளன.

வர்த்தகப் பிரிவை ஸ்தானிக ராலயம் மூடியது சம்பந்த மாக இதுவரை வெளிவிவகார அமைச்சுக்கு உத்தியோகபூர்வ மான அறிவித்தல் எதுவும் இல்லை என்று செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் லொக்குபண்டாரா தெரிவித் தார்.

தலா 70,000 ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரையிலான ... கொண்டு தமது ... கதைகளைக் கூறிவருவதாகத் தெரியவருகிறது.

## 3-ம் ஆண்டு நினைவு



### கப்டன் ஆனந்தன்

[சுப்பிரமணியம் கருணாகரன்]

பிறப்பு 22. 11. 1968 — வீரச்சாவு 05. 10. 1989

ஆனந்தா,
உன் குளிர்ந்த முகமும் குறும்பு விழியும்
எம் தேசத்தின் எதிரியை
நீறாக்கிடும் நிசத்தை நியாயப்படுத்த
உன் வழி தொடர்வோம் ...

மணலாறு — வன்னி மக்கள்

(சி/5149)

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**04-10-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5987

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

26-3130, 24-4707, 21-5633, 24-8429, 22-8835, 28-4381, 26-3741, 27-5197, 26-1084, 26-6796, 27-2004, 24-4292, 24-6475, 26-5846, 21-6741, 40-3089.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

26-5113, 41-8292, 22-4766, 41-4194, 21-1027, 24-4238, 22-3611, 40-2627, 24-5939, 22-6897, 24-6811, 24-5454, 24-6672, 42-2295.